III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.
MCOP.No.179/2022

Deposition of witness for the Petitioner/PW1
solemnly by Tmt.K.Shanthi, Assistant
in accordance with the provision of Act I for 1873 on 06-02-2026

| | | | |
|---|---|---|---|
| Name | : ஆறுமுகம் | Village | : |
| Father's / Husband's Name | : கண்ணன் | Calling | : |
| Age | : | Taluk | : |

**முதல் விசாரணை**

**நான் இந்த வழக்கின் முதல் மனுதாரர். நான் சொல்லக் கூடிய சங்கதிகளை சத்தியப் பிரமாணம் செய்து எழுத்து பூர்வமாக தாக்கல் செய்கிறேன். அதை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.**

1) FIR copy Ex.P1
2) Deceased's Accident Registration copy Ex.P2
3) 1st and 2nd Respondent's Vehicle Insurance Policy copy Ex.P3
4) 1st and 2nd Respondent Vehicle's Driver's Driving Licence copy Ex.P4
5) Deceased's Discharge Summary Copy of Adhiparasakthi Hospital, Melmaruvathur Ex.P5
6) Deceased's Investigation Report Copy of Adhiparasakthi Hospital, Melmaruvathur Ex.P6
7) Deceased's Aadhar card copy Ex.P7
8) Death Certificate copy Ex.P8
9) Legal heirship Certificate copy Ex.P9
10) 1st Petitioner's Aadhar card copy Ex.P10
11) 1st Petitioner's Bank pass book copy Ex.P11
12) 1st Petitioner's Pan Card copy Ex.P12
13) 2nd Petitioner's Aadhar card copy Ex.P13
14) 2nd Petitioner's Bank Pass Book copy Ex.P14
15) 2nd Petitioner's Pan Card copy Ex.P13
16) 3rd Petitioner's Aadhar card copy Ex.P16

17) 3rd petitioner's Bank Pass Book copy Ex.P17

18) 3rd Petitioner's Pan card copy Ex.P18

19) Medical Bills Rs.2,67,084/- Ex.P19

மனுப்படி தீர்ப்பு செய்ய வேண்டும்.

**3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த விபத்து சம்பவத்தை நேரில் பார்த்தேனா என்றால் நானும் விபத்தில் சம்மந்தப்பட்ட வேனில் என்னுடைய மனைவியோடு சேர்ந்து பயணம் செய்தேன். திருவண்ணாமலை கோவிலுக்கு செல்லும்பொழுது தான் இந்த விபத்து நடைபெற்றது. சம்பவ சாலை அகலமான சாலை. சம்பவத்தின்போது நாங்கள் பயணம் செய்த 1 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வேனுக்கும் 3 ஆம் எதிர்மனுதாரருடைய வாகனத்திற்கும் நடுவில் ஒரு அடையாளம் சொல்லப்படாத வேன் வந்தது என்றாலும் அந்த வேனில் மோதாமல் இருக்க 1 ஆம் எதிர்மனுதாரருடைய வாகனம் சாலையின் நடுவில் இருந்த சென்டர் மீடியனில் மோதி எங்களது வாகனத்தின் மீது மோதியது என்றால் சரிதான். இந்த இரண்டு வாகனங்களுக்கும் நடுவில் வந்த வாகனத்தை இந்த மனுவில் நான் சேர்க்காததால் என்னுடைய கோரிக்கை பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்திற்கு பிறகு மேல்மருவத்தூர் கோவில் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டோம். அங்கு சிகிச்சையில் என்னுடைய மனைவி 21 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு கொண்டு செல்லும் வழியில் என்னுடைய மனைவி இறந்துபோனார். என்னுடைய மனைவி துணி வியாபாரம் செய்துவந்தார். என்னுடைய மனைவியின் வருமானத்தை காட்ட எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய மனைவியின் வயதை காட்ட ஆவணம் தாக்கல் செய்திருக்கின்றேன். என்னுடைய மனைவி எந்த வேலையும் செய்யவில்லை என்றாலும் மனுவிற்காக துணி வியாபாரம் செய்கின்றார் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகபட்சமானது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**